மிக அவசரம் / தனிக்கவனம்

ந.க.எண் கே4 / 13286 / 2014

நில நிர்வாகத்துறை,
சேப்பாக்கம்,
சென்னை 600 005.
நாள் 15.4.2015

## சுற்றறிக்கை

பொருள்— பட்டா மாறுதல் – வட்ட / கோட்ட மற்றும் மாவட்ட அளவில் பட்டா மாறுதல் உத்திரவு வழங்குவது – உத்திரவு ஆவணங்களை நிரந்தர ஆவணங்களாகப் பராமரிக்க ஏற்கனவே அறிவுரைகள் சுற்றறிக்கை வாயிலாக வழங்கப்பட்டது – மீண்டும் வலியுறுத்தி அறிவுரைகள் வழங்கப்படுகின்றன

பார்வை— இவ்வலுவலகச் சுற்றறிக்கை ந.க.(கே3) 18920 / 2002 நாள் 21.5.2002

-----

வட்டாட்சியர் அலுவலகங்களில் பட்டா மாறுதல் கோரி வரும் மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு ஆணை வழங்கி, மாறுதல் மேற்கொண்ட பின்னர் அக்கோப்புகளை மூன்றாண்டுகள் கழிந்த பின்னர் அழிக்கப்பட்டு விடுவதாகத் தெரிய வந்ததையடுத்தும், இதனால் இவ்வாணையின்மீது பாதிக்கப்பட்டவர்களால் செய்யப்படும் மேல்முறையீடு / சீராய்வு மனுக்களின் விசாரணையின்போது அக்கோப்புகள் இல்லை எனத் தெரிவிக்கும்போது, அம்மேல்முறையீடு / சீராய்வு மனுக்களின்மீது முடிவு செய்வது மிகவும் கடினமாக இருந்த சூழ்நிலையில், பார்வையிற்காணும் இவ்வலுவலகச் சுற்றறிக்கையில், இனி வருங்காலங்களில், இவ்வாறு பட்டா மாறுதல் செய்யும் அனைத்து ஆவணங்களையும் நிரந்தர கோப்புகளாக முடித்து, பதிவறையில் பராமரிக்கப்பட வேண்டுமெனவும், விசாரணைக்குக் கோரும்போது உடன் தாமதமின்றி அவற்றை அனுப்பி வைத்தல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டதுடன், இதில் தவறுகள் எதுவும் நடக்கக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டது.

2. இருப்பினும், மேற்படி பட்டா மாறுதல் சம்பந்தப்பட்ட கோப்புகள் மூன்றாண்டு முடிவாக முடிக்கப்படுவதாகத் தெரிய வருகிறது.

3. பட்டா மாறுதல் சம்பந்தப்பட்ட கோப்புகள் மிகவும் முக்கியமானவை என்பதால், ஏற்கனவே பார்வையிற்காணும் சுற்றறிக்கையில் அளிக்கப்பட்ட அறிவுரைகள் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றன. இதில் விடுபாடுகள் ஏதும் இல்லாததை உறுதி செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. ஏற்கனவே வழங்கப்பட்ட சுற்றறிக்கை நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

5. இது தொடர்பாக அனைத்து வட்டாட்சியர்கள் / கோட்டாட்சியர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்த சுற்றறிக்கையினைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- கிரிஜா வைத்தியநாதன்,
கூடுதல் தலைமைச் செயலாளர் /
நில நிர்வாக ஆணையர்.

பெறுநர்

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (இணைப்புடன்) (பெயரிட்ட உறையில்)

அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள் (இணைப்புடன்) (பெயரிட்ட உறையில்)

ஒம்/-
கூடுதல் தலைமைச் செயலாளர் /
நில நிர்வாக ஆணையருக்காக

-/ உண்மை நகல் /-

<u>நகல்</u>

<u>மிக அவசரம் / தனி கவனம்</u>

ந.க.(கே3) 18920 / 2002

நில நிர்வாகத்துறை,
சேப்பாக்கம், சென்னை 5.
நாள் 21.5.2002

திருமதி ஒ.போ. சோசம்மா, இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் & நில நிர்வாக ஆணையர்

<u>சுற்றறிக்கை</u>

பொருள்– பட்டா மாறுதல் – வட்ட, கோட்ட மற்றும் மாவட்ட அளவில் பட்டா மாறுதல் உத்திரவு வழங்குவது – உத்திரவு ஆவணங்களை நிரந்தர முடிவு ஆவணங்களால் பராமரிக்க அறிவுரை வழங்குதல் தொடர்பாக

-----

பதிவு மாற்றம் குறித்த சீராய்வு மனுக்கள் ஆணையர் அவர்களால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது கீழமை நீதிமன்றக் கோப்புகளில் வட்டாட்சியர் அலுவலக கோப்புகள் அழிக்கப்பட்டுவிட்டது அல்லது கிடைக்கப்பெறவில்லை என்றோ தெரிவிக்கப்படுகிறது. பட்டா மாறுதல் இனங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கோப்பே மூலக் கோப்பாகும்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் பட்டா மாறுதல் கோரும் மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு ஆணை வழங்கி, மாறுதல் மேற்கொண்ட பின்னர் அக்கோப்புகளை (எம்.டி.ஆர் / ப்பி.டி.ஆர்) மூன்றாண்டுகள் கழித்த பின்னர் அழிக்கப்பட்டு விடுவதாக தெரிகிறது. இதனால்,, இவ்வாணையின் மீது பாதிக்கப்பட்ட நபர்களால் செய்யப்படும் மேல்முறையீடு / சீராய்வு மனுக்களின் விசாரணையின்போது அக்கோப்புகள் இல்லை எனத் தெரிவிக்கும்போது, அம்மேல்முறையீடு / சீராய்வு மனுக்களின் மீது முடிவு செய்வது மிகவும் கடினமாக உள்ளது.

எனவே, இனி வருங்காலங்களில், இவ்வாறு பட்டா மாறுதல் செய்யும் அனைத்து ஆவணங்களையும் நிரந்தர கோப்புகளாக முடித்து, பதிவறையில் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், விசாரணைக்கு கோரும்போது, உடன் தாமதமின்றி அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் அனைத்து வட்ட, கோட்ட ஆட்சியர்களும், மாவட்ட வருவாய் அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதில் தவறுதல் எதுவும் நடக்கக்கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தக்க அறிவுரை வட்டாட்சியர் / கோட்டாட்சியர்களுக்கு வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

த.பி.கா.

இச்சுற்றறிக்கையினைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை உடன் அனுப்பி வைக்குமாம் கேட்டுக் கொள்கிறேன்.

ஒம் /– ஒ.போ. சோசம்மா,
சிறப்பு ஆணையர் & நில நிர்வாக
ஆணையர்

பெறுநர்

அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள்.

/ ஆணைப்படி /

ஒம் /–
கண்காணிப்பாளர்

–/ உண்மை நகல் /–